

2010ல் ஆலடிச் சந்தியில் **K.K.S** வீதியில் அமைந்த இடத்தின் தோற்றம்



2010ல் கலைப்பணி மன்ற தலைவர் திரு.தி.ஜெயராஜ் உரையாற்றுகின்றார்



2005ல் முதலாவது சிலையும் தண்டபாணிக தேசிகரின் ஆசியுரையும்

சிலை திறப்பு:-ஆ.மு சிவாஜிலிங்கம்

தினக்குரல் 04-08-06

# வல்வெட்டித்துறையில் எம்.ஜி.ஆர். சிலை மீள் புனரமைப்பு செய்யப்பட்டது


வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் அண்மையில் தார் ஊற்றி சேதமாக்கப்பட்ட எம்.ஜி. ஆரின் சிலையை நேற்று இராணுவத்தினர் அவசர அவசரமாக துப்பரவு செய்து மீள் புனரமைப்பு செய்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று வடமராட்சிப் பகுதியில் சுற்றிவளைத்துத் தேடுதலை நடத்திய படையினர் அப்பகுதி ஆண்களை அழைத்துச் சென்று, சேதமாக்கப்பட்ட இச்சிலையை அவசர அவசரமாக மீள் புனரமைப்புச் செய்ததோடு, புகைப்படமும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிலை சேதமாக்கப்பட்டது தொடர்பில் இந்தியத் தூதுவராலயம் ஊடாக அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட அழுத்தத்தை அடுத்து படை அதிகாரிகள் நேரில் வந்து இவ் அவசர புனரமைப்பை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் மேற்படி சிலையின் கைவிரல்கள் உடைக்கப்பட்ட நிலையிலேயே இப்போதும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்திலேயே இச்சிலை சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சிற்பியுடன் கலைப் பணிமன்ற தலைவர் திரு.தி.ஜெயராஜ்



**2005 தென்னிந்தியாவைச் சேர்ந்தவரும் சிலையை வடித்தவருமான சிற்பியை வைத்திய கலாநிதி திரு.க.மயிலேறும் பெருமாள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்.**



பிறந்த தினம் 17.01.1917

2010ம் ஆண்டு விஸமிகளால் சிலை அடித்து உடைத்து சேதமாக்கப்பட்ட (2007.ா.2008)பின் 2010ல் சிலைக்கு பதிலாக (டீயநெச)பதாதையில் உருவப்படம் பதித்து வருடாந்த விழா (அவரது பிறந்த தினத்தில் )எடுக்கப்பட்டது.



பாரம்பரிய கலையின் குருவும் அண்ணாவியாருமான திரு.இ.மதியழகன் முன்னிலையில



பாரம்பரிய சண்டைப் பயிற்சி(சிலம்படி)முக்கிய பிரமுகர் அமரர் அருளானந்தம் (பவா அப்பா)அவர்களையும் காணலாம்.



